# வெற்றிக்கு வழி மாதிரி வினாத்தாள்

(புதிய வினாத்தாள் வடிவமைப்பு)

# பொதுத்தமிழ் - மேல்நிலை முதலாமாண்டு - 2019

காலஅளவு: 2.30 மணி மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி – அ (செய்யுள், உரைநடை)

**I.** பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.) **6x1=6**

1. ஒரிய மொழிக் கவிஞர்
   அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே இ) மனோரமா பிஸ்வாஸ் ஈ) பாப்லா நெருடா
2. "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ" என்ற வரிகள் இடம் பெறும் நூல்
   அ) தொல்காப்பியம் ஆ) சிறுபாணாற்றுப்படை இ) கலித்தொகை ஈ) திருமுருகாற்றுப்படை
3. "சிந்து வெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்" என்னும் நூலின் ஆசிரியர்
   அ) பாலகிருஷ்ணண் ஆ) சுஜாதா இ) பிரபஞ்சன் ஈ) பிரமிள்
4. படைக்கவும் அடக்கவும் கொண்ட ஆற்றல்
   அ) லகிமா ஆ) கரிமா இ) பிராகாமியம் ஈ) ஈசத்துவம்
5. மகிழ்ச்சியின் மைந்துறும் போது ___________ உள்ளுக.
   அ) குறிப்பின் குறிப்புணர்வாரை ஆ) மானம் மாண்ட வழிச்செலவு
   இ) பகை என்னும் பண்பில் அதனை ஈ) இகழ்ச்சியின் கெட்டாரை

**6. பொருத்துக.**

1. வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
2. அண்ணாமலையார் - ஆ) சி.சு. செல்லப்பா
3. வாடிவாசல் - இ) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச் சிந்து

பகுதி – ஆ (இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)

**II.** அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **8x1=8**

7. பெருங்கலம் என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகள் யாவை?
8. யாருடைய பிறந்த நாளை உலக நல நிறுவனம் உலக நீரிழிவு நோய் நாளாகக் கடைபிடித்து வருகிறது?
9. Invasion என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக.
10. தருதி - இச்சொல்லின் வேர்ச்சொல்லை கூறுக.
11. கேட்டு என்ற வினையெச்ச சொல்லை வினையாலணையும் பெயராக மாற்றுக.
12. சிறுகதை மன்னர் என்று போற்றப்படுபவர் யார்?
13. திரை இசையில் சூ.ஃ.பி இசையை அறிமுகப்படுத்தியவர் யார்?
14. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    காலங்காத்தால எந்திரிச்சுப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

**III.** அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3x2=6**

15. பாயிரத்திற்கு உரிய ஏழு பெயர்களைக் குறிப்பிடுக.
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. நலங்கிள்ளி ஆற்றல் எத்தகையது?
18. செந்துறைப் பாடாண் பாட்டு - துறை விளக்கம் தருக.

ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2x2=4**

19. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
20. ஆனந்தரங்கர், ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி விளக்குக.
21. கலைச்சொல், அகராதி - வேறுபடுத்தி விளக்குக.

**IV.** எவையேனும் ஏழனுக்கு விடை தருக. **7X2=14**

22. பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) அலர்ந்து ஆ) ஆழ்க
23. புணர்ச்சி விதி தருக. அ) பெருந்தவத்தாய் ஆ) மன்னுயிர்
24. இயல்பீறு, விதியீறு - எடுத்துக்காட்டுத் தருக.

25. “திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தவர் ஜி.யு. போப்” - விடைக்கேற்ற வினாவை எழுதுக.
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) கால்நடை ஆ) தங்கை
27. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. கலை, களை, கழை
28. பிறமொழிச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக. அ) smartphone ஆ) prospectus
29. சிலப்பதிகாரத்தைப் படித்தேன் வியந்தேன் மகிழ்ந்தேன் - இத்தொடருக்குரிய நிறுத்தற்குறிகளை இடுக.
30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    பள்ளி கூடங்களில் பயிலும் மாணவர்கள், தமிழ்மொழி வழியாகவே அனைத்து துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

**V. சிறுவினா**

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8**

31. “சலச வாவியில் செங்கயல் பாயும்” - இடம் சுட்டி விளக்குக.
32. சங்ககாலத் தமிழர்களின் வானியல் அறிவினை முதுகண்ணனார் பாடல் வழிப் புலப்படுத்துக.
33. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8**

34. ஒற்றை வைக்கோல் புரட்சி – குறிப்பு வரைக.
35. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
36. “சித்தர்கள் சமூக உணர்வு கொண்டவர்கள்” இக்கூற்றை ஆராய்க.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3x4=12**

37. பாடாண்திணை அல்லது பொருண்மை காஞ்சித் துறை விளக்குக.
38. சொற்பொருள் பின்வருநிலையணி அல்லது வேற்றுமை அணியை விளக்குக.
39. குறிப்புகளைக் கொண்டு பத்தியாக எழுதுக.
    வீடு – மின்சாதனக் கருவி – கவனம் – ஈரக்கை – தவிர்த்தல் – தொலைக்காட்சி – அலைப்பேசி – இரவு – அணை – அதிகாலை – பள்ளிகள் – பொதுவிடங்கள் – திடல் – மின்கம்பம் – கவனம்
40. இலக்கிய நயம் பாராட்டுக. (எவையேனும் நான்கு நயங்கள்)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்

**- பாரதியார்**

**VII. நெடுவினா (இரண்டனுக்கு மட்டும்) 2x6=12**

அ) 41. “அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்” இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

**(அல்லது)**

கண்ணன் கன்னனிடம் வேண்டி நின்ற நிகழ்வை வில்லிபாரதம் வழி விரிவாக எழுதுக.

42. பௌத்த கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரி.

**(அல்லது)**

இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இருந்தன - இக்கூற்றினை மெய்ப்பிக்க.

**ஆ) பின்வரும் துணைப்பாடல் பகுதி வினாவிற்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. 1x6=6**

43. இனிக்கும் இன்சுலின் கட்டுரைச் செய்திகளை உரையாடல் வடிவில் தருக.

**(அல்லது)**

நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றை சுருக்கி எழுதுக.

**VIII. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6**

44. அ) உண்டால் அம்ம…..எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
    ஆ) பொருட்டு என முடியும் குறளை எழுதுக.